[1973 பிப்ரவரி 9

சுருளியாறு நீர் மின் திட்டம்.

*100. வினா—திரு பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மின் சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் ஒன்றை நிறுவும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டின் நான்காவது திட்டத்தில் சுருளியாறு புனல் மின் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ளத் திட்ட ஆணைக்குழு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. திட்டத்தின் தொடக்கப்பணிகளை எடுத்துக்கொள் கொள்ளவும் மாநில அரசிற்கு திட்ட ஆணைக்குழு அனுமதி வழங்கி யுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடுகளுக்குத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இடையே, இந்த நீர் மின் திட்டத்தின் துவக்கப்பணிகள் தமிழக மின்வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மு. சுருளிவேல்: சென்ற மாதம் 14-ந் தேதி அன்று இந்த சுருளி நீர் வீழ்ச்சியில் நீர் மின்சார நிலையம் நிறுவும் திட்டத்தை அமல் செய்யும் இடத்திற்குச் சென்று பார்த்தேன். அங்குள்ள தொழிலாளர் கள் வேலையில்லாமல் தாங்கள் ஊதியம் பெறுவதாக ஒரு குறைபாட் டினை பொறுப்புணர்ச்சியோடு கூறினார்கள். அதற்குக் காரணமாகக் கூறி யது பல்வேறு திட்டங்களைப் பார்க்க ஒரே மேல் அதிகாரி இருப்பதால் இத்திட்டத்தில் அவருடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடிய வில்லை. ஆகவே வேலை தாமதப்படுகிறது என்று கூறினார்கள். அந்தத் தண்ணீரில் மின்சாரம் உற்பத்தியான பிறகு வைகை அணைக்கு வரு வதற்குப் பதிலாக ராஜபாளையத்திற்குத் திருப்பி விடப்படுகிறது என்ற தவ றான பிரசாரத்தைத் திட்டமிட்டு சில பகுதியினர் அங்கு எழுப்பி வருகி றார்கள். எனவே அந்த மக்களின் நியாயமான பயத்தைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: தவறான பிரசாரத்தை நம்பத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் ஒரு வழி யாக முடிவுற்றது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]